**சுருக்கம்**

தமிழ்நாடு அமைச்சுப்பணி - வேளாண்மைத்துறை - கருணை அடிப்படையில் பணி நியமனம்- திரு.எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி த/பெ. மறைந்த திரு.எஸ்.பெரிய கருப்பன், கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் பணியினை வரன்முறை செய்தல்-ஆணை வெளியிடப்படுகிறது.

**வேளாண்மை [வே.நி4(2)] துறை**

**அரசாணை (3டி) எண்.140**

**நாள்: 21.04.2015**
**திருவள்ளுவராண்டு 2046, சித்திரை-8**
படிக்கப்பட்டது

1. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.அநிபி.3/20811/2014, நாள் 09.04.2014
2. அரசு கடித எண். 10236/வேநி4(2)/2014-3, நாள் 12.01.2015
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3, அவர்களின் கடித எண்.1034/சிடி-பி1/2015, நாள் 30.03.2015.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், மதுரை மாவட்டம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்த திரு.எஸ்.பெரிய கருப்பன் என்பவர் பணிக்காலத்தில் 4.11.2000 அன்று மரணம் அடைந்து விட்டார் என்றும், அக்குடும்பத்தின் வறிய நிலையைக் கண்டும், அன்னாரின் குடும்பத்தினை காப்பாற்றும் பொருட்டும், அன்னாரின் மகன் திரு எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி அரசுப் பணியில் சேர கல்வி மற்றும் வயது போன்ற தகுதிகள் முழுவதும் பெற்றிருந்ததால், அவர் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, 13.11.2013 முற்பகல் முதல் மதுரை மாவட்டம் விளாம்பட்டி துணை வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டார் என்றும், திரு எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி என்பவரின் பதவியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 13.11.2013 முற்பகல் முதல் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் வேண்டியுள்ளார்.

2. திரு எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி, பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி அடைந்துள்ளார். அவர் பிறந்த தேதி 02.11.1981 ஆகும். பணி நியமன நாளில் தனியாரின் வயது 33 ஆகும். இந்நிகழ்வில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, திரு எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி என்பவரை 13.11.2013 முற்பகல் முதல் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் வரன்முறை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தில் காலஞ்சென்ற திரு.எஸ்.பெரிய கருப்பன் என்பவரின் மகன்

திரு.எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி என்பவரைக் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வேளாண்மைத் துறையில் 13.11.2013முற்பகல் முதல் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் அவரது பணியை வரன்முறைப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக, 1954-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில், விதி 16(பி)-இன் பிற்பகுதியின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது இசைவினை அளித்துள்ளது.

4. வேளாண்மை ஆணையரின் செயற்குறிப்பு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு ஆகியவற்றை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி, என்பவரைத் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், வேளாண்மைத் துறையில் 13.11.2013 முற்பகல் முதல் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் பணி வரன்முறை செய்வதற்கு அப்பதவிற்குரிய உடல் தகுதியை அவர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. திரு.எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி, என்பவரின் பணி 13.11.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத்தொகை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தகுதியுடையவராவார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.கு.எண்.9680/க்யூ1/2015,நாள்.16.04.15-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜேஷ் லக்கானி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

**பெறுநர்**

திரு எஸ்.பி.ஜெகவீரகருத்தபாண்டி, கிடங்கு மேலாளர் (தரம்-3)-
(வேளாண்மை இயக்குநர், சென்னை 5. மூலமாக).
வேளாண்மை இயக்குநர், சென்னை - 5.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்,
மாநிலக் கணக்காயர், சென்னை - 18 / பெயரில்.

**நகல்**

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை - 9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை - 9.
மாண்புமிகு வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்